முன்னாள் அமைச்சர் கொடுத்த வாக்குறுதியைக் காப்பாற்றுகிற அளவிலாவது இன்னாள் அமைச்சர் அதனைக் கட்டுவதற்கு நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மாண்புமிகு அமைச்சர் சாதிக் பாட்சா அவர்கள் பரிசீலனை செய்யப்படும் என்று சொன்னது உண்மை. பரிசீலிக்கப் பட்டது. சாதகமாகப் பரிசீலிக்கப்பட்டு, இந்த ஆண்டு வேலை துவங்கப்பட இருக்கிறது என்பதை ஜேம்ஸ் மகிழ்ச்சி அடையவாவது தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : தலைவர் அவர்களே, ரூ. 20 இலட்சம் அனுமதிக்கப்பட்டது என்று முன்பு கூறி, அது இப்பொழுது டெபர் செய்யப் பட்டிருக்கிறது என்ற ஒரு குறிப்பு இந்த அறிக்கையின் அடிப்படையிலே வந்திருக்கிறது. அதை டெபர் செய்ததற்கு என்ன காரணம்? இப்பொழுது, ஏதோ திறக்கப் போகிறார்கள் என்று கேட்டவுடன் மகிழ்ச்சியாக இருக்கிறேன். இந்த ஆண்டு நிச்சயமாக வேலை தொடங்கப்படுமா? அதற்காக இந்த ஆண்டு நிதி ஒதுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : ரூ. 20 இலட்சத்தில் பாலம் கட்ட 1973-74-ம் ஆண்டு திட்டம் பரிசீலிக்கப்பட்டு நிதிநிலைப் பற்றாக்குறையின் காரணமாக கைவிடப்பட்டு 22-12-1973-ல் ஸ்டாண்டிங் பைனான்ஸ் கமிட்டியில் ஒப்பளிக்கப்பட்டு, ரூ. 25 இலட்சம் செலவாகும் என்று வேலையை ஏற்றுக் கொண்டு, 1974-75-ல் வேலையைத் துவங்க அரசு ஒத்துக்கொண்டிருக்கிறது.

திரு. ஜே. ஜேம்ஸ் : இந்த பால வேலையைத் துவங்க அடிக்கல் நாட்ட அமைச்சர் அவர்கள் வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, நண்பர் ஜேம்ஸ் அவர்கள் அழைக்கிறார்கள். அதைப் பரிசீலித்து ஒத்துக்கொள் கிறேன் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

Lands leased out to cinema studios

*755 *Q*.—Thiru A. PARANDHAMAN: Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) the names of cinema studios in Tamil Nadu for which Government lands have been given on lease as on 1st July 1973;

1974 ஏப்ரல் 4]

(*b*) the lease amount collected from such studios per year; and

(*c*) the extent of land leased out to them?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :

(அ) சத்தியா ஸ்டுடியோஸ் (பி) லிமிடெட், சென்னை-28.

(இ) ஆண்டு ஒன்றுக்கு குத்தகை தொகை ரூ. 6,820-65.

(உ) 1 காணி 14 மனை 2,340 சதுர அடி.

திரு. ஆ. பரந்தாமன் : தலைவர் அவர்களே, நமது அரசாங்கத்தின் சார்பாக லீஸ் முறையிலே, சத்தியா ஸ்டுடியோவுக்கு நிலத்தைக் கொடுத்திருப்பதாகத் தெரிகிறது. எந்த நோக்கத்திற்காக அந்த நிலத்தை சத்தியா ஸ்டுடியோவினர் வாங்கினார்களோ அந்த நோக்கத்தை நிறைவேற்றவில்லை என்கிற ஒரு கருத்து இருந்து கொண்டிருக்கிறது. ஏதோ ஒரு பை-இண்டஸ்ட்ரீஸ் ஸ்டார்ட் செய்வதற்காக அந்த நிலத்தை வாங்கினார்கள் என்று கேள்விப்படுகிறேன். அது உண்மையா? அதன் விவரங்கள் என்ன? அப்படி அந்த நோக்கத்தை நிறைவேற்றவில்லையென்றால், உடனடியாக லீசை கான்சல் செய்ய இந்த அரசு முன்வருமா என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : சத்தியா ஸ்டுடியோ உரிமையாளர்கள், 1968-ம் ஆண்டு ஜனவரியிலே எழுதிய கடிதத்திலே,

'It is quite contiguous to and adjoining our land R.S.4274/1 and the inevitable requirement is for the purpose of expansion of studio amenities, the provision of amenities for several producers who frequent our studios, for establishing an industrial centre as a bi-industry relating to the motion picture industry and for running an industrial training centre' என்று அந்த நிபந்தனைகளை அவர்களே கேட்டு, அதன்படி கொடுக்கப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினருடைய கருத்தின் அடிப்படையிலே அதிகாரிகள் அதைப் பரிசீலிக்கும்படி கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறார்கள்.

திரு. கோவை செழியன் : பேரவைத் தலைவரவர்களே, இப்பொழுது சத்தியா ஸ்டுடியோவுக்குப் பக்கத்திலே உள்ள அரசாங்க நிலத்தை அவர்கள் குத்தகைக்கு எடுத்திருக்கிறார்கள். அதிலே, இப்பொழுது ஷூட்டிங் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. அங்கே, சிறிய ஸ்டுடியோவுக்குச் சம்பந்தமான சிறு தியேட்டர்களைக் கட்டுவதற்கு அவர்கள் முடிவு செய்திருக்கிறார்கள்.

ஆனால், அந்த நிலத்தை அரசாங்கத்திற்குத் தருவதற்குத் தயாராக இருந்தாலும், அந்த இடத்தை அப்படித் தந்தால், அங்கே ஒரு இரும்புப் பட்டறை வைத்து, ஷூட்டிங் நடத்துவதற்கு இடைஞ்சலாக்குவதற்கு அரசாங்கம் முயற்சி எடுப்பதாகச் சொல்லப்படுகிறதே அது உண்மைதானா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : முதலிலே, அந்த இடத்தை கொடுப்பதாக மாண்புமிகு உறுப்பினர் சொல்கிற கருத்து வெற்றி பெறுமானால் பிறகு மாண்புமிகு உறுப்பினர் சொல்வது பற்றிப் பரிசீலிக்கலாம். அரசாங்கத்திற்குச் சொந்தமான நிலம், அரசாங்கத்திற்கு வந்த பிறகுதான் பரிசீலிக்கப்படும்.

திரு. நா. வீராசாமி : தலைவர் அவர்களே, இப்பொழுது சொல்லப்படுகிற அந்த நிலம் அரசாங்கத்திற்குத் திருப்பிக் கொடுக்கப்படும் என்று சொல்லி ரொம்ப நாளாயிற்றே, அதைக் கொடுப்பதிலே ஏதாவது தகராறு இருக்கிறதா ? அல்லது, கொடுக்கிறேன் என்று சொன்னவர்கள் ஏதாவது யோசித்துக் கொண்டிருக்கிறார்களா ? அதைப்பற்றி அரசாங்கத்திற்கு ஏதாவது தெரியுமா ? அப்படிக் கொடுக்காவிட்டால், எடுத்துக்கொள்ள அரசாங்கம் ஏதாவது நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : அப்படி ஒரு செய்தி பத்திரிகையிலே வந்திருக்கிறது. அரசாங்கத்திற்கு அதிகாரப் பூர்வமாகத் தகவல் ஒன்றுமில்லை.

Kuzhithurai House Mortgage Bank.

*756 Q.—Thiru N. DENNIS : Will the Hon. the Minister for Labour be pleased to state—

(a) whether the Presidentship and Board of Directors of the House Mortgage Bank Y-335 Kuzhithurai, Kanyakumari district is kept vacant for a long time; and

(b) if so, the reasons for the delay?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : (அ) & (இ) 4—10—1973 அன்று வீட்டு வசதி வாரியத் தலைவரால் (கூட்டுறவுப் பிரிவு) புதிய குழு ஓராண்டு காலத்திற்கு நியமனம் செய்யப்பட்டு, தற்போது பொறுப்பேற்றிருக்கிறது.